

சிங்கப்பூர் துறைமுக ஆணையத்தின் அழைப்பிற்கிணங்க, பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, 27.9.2023 அன்று தமிழ்நாடு அரசு அதிகாரிகள் அடங்கிய குழுவுடன், சிங்கப்பூர் துறைமுகத்தில் (PSA) சரக்குப் பெட்டக முனையத்தைப் பார்வையிட்டார்கள். இந்நிகழ்ச்சியின் போது, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை, கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ்,., சிங்கப்பூரிலுள்ள இந்திய தூதரக ஆணையத்தின் முதன்மைச் செயலாளர் டி.பிரபாகர் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### சிங்கப்பூர் துறைமுக ஆணையத்தின் அழைப்பினை ஏற்றுச் சென்ற

# அமைச்சர் எ.வ.வேலு சிங்கப்பூர் துறைமுகத்தைப் பார்வையிட்டார்!

## “அந்நிய முதலீட்டை ஈர்க்க முதல்வர் மு.க.ஸ்டாலின் அரசு உதவும்” என உறுதி!

சிங்கப்பூர், செப். 29-

பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ. வேலு, சிங்கப்பூர் துறைமுக ஆணையத்தின் அழைப் பிற்கிணங்க, நேற்று முன்தினம் (27.9.2023), சென்னையில் இருந்து சிங்கப்பூர் சென்றார்.

நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை, கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், சிங்கப்பூரிலுள்ள இந்திய தூதரக ஆணையத்தின் முதன்மைச் செயலாளர் டி.பிரபாகர் மற்றும் பிற அதிகாரிகள் அடங்கிய குழுவுடன் ‘சிங்கப்பூர் துறைமுக சரக்குப் பெட்டக முனையத்தை’ 27.9.2023 அன்று பார்வையிட்டார்.

அமைச்சர் எ.வ.வேலு விடம், சிங்கப்பூர் துறைமுகத்தின் சிறப்புகளைப் பற்றி, சிங்கப்பூர் துறைமுகத்தின் பிரதிநிதி எடுத்துக் கூறினார்.

பன்னாட்டு துறைமுக சரக்குப் பெட்டக முனையங்களில், சிங்கப்பூர் சரக்குப் பெட்டக முனையம் முதன்மையான ஒன்றாகும். இது சிங்கப்பூர் சரக்குப் பெட்டகப் பரிமாற்ற மையமாக செயல்பட்டு வருகிறது. இந்த சரக்குப் பெட்டக முனையம், துறைமுகச் சேவைகள் மற்றும் சரக்கு தீர்வுகளை வழங்குகிறது.

2023 ஆம் ஆண்டில், சரக்குகளைக் கையாள்வதில் பல்வேறு சவால்களை எதிர்கொண்டபோதிலும், இந்த துறைமுகம் மட்டும், 37 மில்லியன் சரக்குப் பெட்டகங்களை (37million TEU) வெற்றிகரமாக கையாண்டுள்ளது. பேட்டரி ஆற்றல் சேமிப்பு அமைப்பு (Battery Energy Storage System-BESS), கணினி சார்ந்த ஒருங்கிணைந்த துறைமுக முனைய இயங்குதல் வசதி (Computer Integrated Terminal Operations Systems-CITOS) மற்றும் துறைமுக வலைதளம் (Portnet) போன்ற நவீன தொழிற்நுட்பங்கள். இந்த சாதனைக்கு காரணமாகும். சிங்கப்பூர் துறைமுகம் 55 கப்பல்கள் நிறுத்தும் தளம் மற்றும் சுமார் 50 மில்லியன் (50million TEU) சரக்குப் பெட்டகங்களைக் கையாளும் திறன் கொண்டது என்று, அமைச்சர் எ.வ.வேலு விடம் விளக்கிக் கூறினார்.

**தமிழ்நாட்டில் 1076 கி.மீ. கடற்கரை!**

சிங்கப்பூர் துறைமுக அலுவலர்களிடம், அமைச்சர் எ.வ.வேலு, தமிழ்நாட்டில் 1,076 கிலோ மீட்டர் நீளமுடைய கடற்கரை உள்ளது என்பதை தெரிவித்து, கடலூர் மற்றும் நாகப்பட்டிணம் ஆகிய இடங்களில் சிறு துறைமுகங்கள் அமைந்துள்ளன. இந்ததுறைமுகங்களையோ அல்லது இதர சிறு துறைமுகங்களில், ஏதேனும் பொருத்தமான சிறு துறைமுகங்களை மேம்படுத்துவது தொடர்பாக, விரிவாக விவாதித்தார்.

மேலும், தமிழ்நாட்டின் கடற்கரையின் திறனைப் பயன்படுத்துவதை, நோக்கமாகக் கொண்ட பிற வரவிருக்கும் திட்டங்களைப் பற்றியும் எடுத்துரைத்தார்.

**அந்நிய முதலீட்டை அதிகரிக்க ஆலோசனை!**

தமிழ்நாட்டில் சிறு துறைமுகங்களை மேம்படுத்த அன்னிய முதலீட்டை அதிகரிப்பதற்கான சாத்தியமான வழிகள் குறித்தும், சிங்கப்பூர் துறைமுகப் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடினார்.

துறைமுகங்கள் மற்றும் கடல்சார் திட்டங்களுக்கு, முதலீடுகளை எளிதாக்குவதற்கு, அனைத்து உதவிகளையும் வழங்குவதாக, அமைச்சர் எ.வ.வேலு உறுதியளித்தார்.

தமிழ்நாட்டிலுள்ள சிறு துறைமுகங்களை மேம்படுத்த, அமைச்சர் எ.வ.வேலு மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு, சிங்கப்பூர் துறைமுகப் பிரதிநிதிகள் உறுதுணையாக இருப்பதாகத் தெரிவித்தார்கள்.

சிங்கப்பூர் துறைமுக ஆணையத்தின் அழைப்பிற்கிணங்க, பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, 27.9.2023 அன்று தமிழ்நாடு அரசு அதிகாரிகள் அடங்கிய குழுவுடன், சிங்கப்பூர் துறைமுகத்தில் (PSA) சரக்குப் பெட்டக முனையத்தைப் பார்வையிட்டு, முத்தமிழறிஞர் கலைஞர் குறித்த புத்தகத்தை வழங்கினார். இந்நிகழ்ச்சியின் போது, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை, கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், சிங்கப்பூரிலுள்ள இந்திய தூதரக ஆணையத்தின் முதன்மைச் செயலாளர் டி.பிரபாகர் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை! டி.லோகேஷ் தலைமை!

# சென்னை கிழக்கு மாவட்ட இளைஞர் அணி சார்பில் மாபெரும் பொதுக்கூட்டம்!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி - கனிமொழி என்.வி.என்.சோமு எம்.பி.சிறப்புரை !

சென்னை, செப். 29-

கலைஞர் நூற்றாண்டு விழா வையொட்டி, சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி சார்பில் “உடன் பிறப்பின் உயிர்த் துடிப்பு கலைஞர்” எனும் தலைப்பில் மாபெரும் பொதுக்கூட்டம் 30.9.2023 சனிக்கிழமை மாலை 6 மணியளவில் நம்மாழ்வார் பேட்டை சின்னபாபு தெருவில் (ஐந்து விளக்கு அருகில்) நடைபெறுகிறது.

இக்கூட்டத்திற்கு சென்னை கிழக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் டி.லோகேஷ் தலைமை வகிக்கிறார்

சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் -அமைச்சர் பி.கே.சேகர்பாபு, வழக்கறிஞர் ப.தாயகம்கவி எம்.எல்.ஏ., எம்.சாமிகண்ணு, செ. தமிழ் வேந்தன், சரிதா மகேஷ்குமார், இசட். ஆசாத், ரமணி லோகேஷ், நா.துலுக்காணம், பி.சுகுமார், வனஜா சண்முகம், இரா.வீரமணி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

ஜெ. பாலமுருகன், பா. ஜெகதீஷ், க.வினோத், எஸ். தனசேகர், ஜி.ஜெ.பிரபு, ஆர்.டி.சங்கர்நானா, பா.பி. தாஸ், கே.மணிமாறன் ஆகியோர் வரவேற்புரையாற்றுகின்றனர்.

இப்பொதுக் கூட்டத்தில் திராவிடர் கழகத்தலைவர் ஆசிரியர் கி.வீரமணி, டாக்டர் கனிமொழி என்.வி.என்.சோமு எம்.பி.ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

இக்கூட்டத்தில் மேயர் ஆர்.பிரியாராஜன், டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி., அ.வெற்றிஅழகன் எம்.எல்.ஏ., ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ., புனிதவதி எத்திராசன், தமிழ்ச்செல்வி சசிகுமார், மு.சரவணன், ப.ரங்கநாதன், கே.எஸ். இரவிச்சந்திரன், தமிழன் பிரசன்னா, கே.சந்துரு, பி.கே.மூர்த்தி எம்.சி., சங்கரிநாராயணன், எஸ்.மணிமுடி, கே.எஸ்.எம்.நாதன், என்.பி.எம்.ஷேக்அப்துல்ல, வே.உமாகாந்த், பரிதி இளம்சுருதி, ஆர்.வரதன்

கோ.ஏகப்பன், தேவஜவகர், ஜி.எம்.தேவன், புனிதவதி எத்திராசன் எம்.சி., கூ.பீ.ஜெயின் எம்.சி., ஸ்ரீராமலு எம்.சி., சொ.வேலு எம்.சி., டாக்டர் ஜி.சாந்தகுமாரி எம்.சி., ஐ.சி.எப்.வ.முரளிதரன், ஏ.நாகராசன் எம்.சி., வே.வாசு, வி.சுதாகர், எஸ்.முரளி, எஸ்.இராஜசேகர், டி.எஸ்.பி. இராஜகோபால் எம்.சி., எம்.டி.ஆர். நாகராஜ், பி.ஜெ.துள சிங்கம், லயன் பி.உதயசங்கர், கோ.மணி, எஸ். பன்னீர் செல்வம், டி.வி.செம்மொழி எம்.சி., வி.ரமேஸ் (எ) நீல கண்டன் எம்.சி., சாவித்திரி வீரராகவன், எம்.இப்ராஹிம் கனி, அ.நிர்மலாதேவி, டாக்டர் ஏ.பி.பூர்ணிமா எம்.சி. இரா.கலைச் செல்வி, தமிழ்ச் செல்வி சசிகுமார் எம்.சி., மு.சரவணன் எம்.சி., சி.மகேஷ்குமார், எம். பெரோஸ்கான், வானவில் விஜய், ஜி.தாமரேன், எல். பி.எப். மோகன் துரைகண்ணன், சுதாதேனதயா ளன் எம்.சி., ராஜேஸ்வரி ஸ்ரீதர் எம்.சி., வி.வி.நாகவள்ளி எம்.சி., பி.விஜயகுமார், எம். விநாயகம், கா.ராஜ்முகமது, க.பா. பிரதீப் குமார், ம.அசோக்குமார், கு.கிருஷ்ணமூர்த்தி, எல்.சம்பத்குமார், து.ஆயிரம், ஆர்.எஸ். சித்திக் உள்ளிட்ட பலர் பங்கேற்கின்றனர்.

75வது வட்ட கழக செயலாளர் வி.க. வெங்கடேசன் நன்றி கூறுகிறார்.